**சக்தி பௌண்டேஷன் - தமிழ் CAC வகுப்பு**
**Uni5 பக்த விஜயம் - 52. ஸ்ரீமான். ஜகன்மித்ரர்**

---

தன்னுள் ப்ரஹ்மத்தை அறிந்தவனே உலகின் நண்பன் ஆவான்.அவன் எதற்கு பயப்பட வேண்டியதில்லை.அவனது உண்மையான உழைப்பையும் சேவையையும் சமூஹம் அங்கீகரிக்கும்.அவனால் பல நல்ல மாற்றங்கள் ஏற்படும்.

வடதேசத்தில் பாரசீ க்ராமத்தில் வாழ்ந்த உன்னத அன்பரே ஜகன்மித்ரர்.பேருக்கு ஏற்ப சகலத்தையும் தன்னுள் இருக்கும் சத்யத்தின் வடிவாகக் கண்டு அன்பை அனைவருக்கும் புகட்டி ஆன்மீகப் பணிகள் செய்து வாழ்கிறார்.இவருக்கு மனைவியும் இரண்டு பிள்ளைகளும் இவரைப் போலவே இவரது வழியில் வாழ முற்பட்டுகின்றனர்.

ஊர் ஊராகச் சென்று பஜனைகள் பாடியும் பாண்டுரங்க வைபவங்களை எடுத்துக் கூறியும் இவர் மிக உயர்ந்த விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தினார்.பாரசீ க்ராம ஜனங்களுக்குள் இவரால் ஏற்பட்ட மாற்றங்கள் பற்பல எனலாம்.

ஸ்ரீமத் பாகவத்தை மிகவும் எளிய முறையில் பாரம ஜனமும் தன்னுடன் தொடர்புபடுத்திக் கொள்ளும் வகையில் இவர் எடுத்துப் பாடுவது மிகவும் ப்ரபலம்.குறிப்பாகக் கபீரை மானசீக குருவாகக் கொண்டு அவர் கூறிய ஆன்மீக வழியில் வாழ்பவர் ஜகன்மித்ரா.

**சுதர்சனம் காத்த வீடு**
அப்போது இவர் வாழ்ந்த பகுதியை வேறு மத அரசன் ஆளும் காலம்.மதச் சண்டைகள் மலிந்து இருந்த காலம். இவரால் மத மாற்றங்கள் இயற்கையாகத் தடைப்படுவதைப் பொறுக்காத பலர் இவரைக் கொல்ல முடிவு செய்து ஒரு நாள் இவர் வீட்டுக்குத் தீ வைத்தனர்.

அப்போது ஜகன்மித்ராவின் குடும்பம் தீவிர பஜனையில் லயித்து இருந்த காலம். தன்னைச் சுற்றி நிகழும் ஆபத்தை உணர்ந்த அவர் அதுவும் ப்ரஹ செயலே என்று அமைதியான போது சுதர்சன சக்ரத்தின் சக்தியால் அவ்விடத்தில் தீ அணைந்ததை ஊரார் கண்டு மேலும் இவர் மீது மரியாதை கொள்கிறார்கள்.

**ஊரார் அளித்த தக்ஷிணை**
இவரது பக்தியின் தூய்மை கண்ட ஊரார், இவருக்கு நிலங்கள் அளித்து, அதில்

அவர்களே உழைத்து, அதன் மூலம் வருவாயை தக்ஷிணையாய் அளித்தனர்.அதைக் கொண்டு அவர் ஊரில் பல சமூஹ நற்காரியங்கள் செய்தார். குறிப்பாக கல்விச்சாலை, கோயில், கிணறுகள் உருவாகினார்.இதனால் இவரது புகழ் பல ஊர்களுக்கும் பரவியது.

**புலிப்பால் வேண்டிய மன்னன்**

இவரது வளர்ச்சியைப் பொறாத மன்னன் இவரை அழைத்தார்.தனக்கு வ்யாதி என்றும் அதற்கு ஆயுர்வேத மருத்துவம் செய்ய புலிப்பால் வேண்டும் என்றும் கூறினான். மன்னுள் இருக்கும் ப்ரஹ்மத்தின் செயலே என்று அதை ஏற்றுக் கொண்ட ஜகன்மித்ரா காட்டுக்குள் சென்று புலியை அழைத்தும் வந்தாராம்.அதனால் அவரது ஆன்மீக பலத்தை உணர்ந்த அரசன் அவரிடம் மன்னிப்பும் வேண்டினானாம்.

எனவே வாழ்க்கையில் நிகழும் செயல்களை அதன்போக்கில் அமைதியாக ஏற்றுக் கொள்க.இறைவனின் துணையால் விவேகத்துடன் அதைத் தீர்க்கும் வழியை அறிக. பெரியோரின் துணை கொள்க.இனிய வாழ்க்கை சித்திக்கும் என்பதில் ஐயமே இல்லை!

ஹரி ஓம்!